மැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: LAE/2025/96** **2025.05.05**

# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06

## தேர்தல் முடிவுகளின் ஒ(ளி)(லி)பரப்பு உரிமையை வழங்குதல்

### 01. உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளை (Official Election Results) வெளியிடுதல்

2025 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலின் போது அத்தாட்சிப்படுத்திய தேர்தல் முடிவுகளை ஒ(ளி)(லி)பரப்பு செய்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற வேண்டும். உரிய கொடுப்பனவுகளை மேற்கொண்டு பதிவுசெய்து கொள்ளும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களுக்கு மாத்திரம் சான்றுறுப்படுத்திய முடிவுகளை பாதுகாப்பான கணினி வலையமைப்பொன்றின் ஊடாக உடனுக்குடன் வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகள் தேர்தல் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ளன. தேர்தல் முடிவுகளின் ஒ(ளி)(லி)பரப்பு உரிமையை ஏற்கனவே பெற்றுக்கொண்ட ஊடக நிறுவனங்களின் பட்டியலொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலும் இதனைக் காணலாம்.

### 02. உத்தியோகபூர்வமற்ற தேர்தல் முடிவுகளின் (Unofficial Election Results) ஒ(ளி)(லி)பரப்பு

கடந்த தேர்தல்களின் போது சில ஊடக நிறுவனங்களின் பிராந்திய முகவர்கள் உத்தியோகபூர்வமற்ற விதத்தில் பெறப்பட்ட முடிவுகளை ஒ(ளி)(லி)பரப்பு செய்ததன் மூலம் தேர்தல் முடிவுகள் மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடைந்ததை அவதானிக்க முடிந்தது. ஆகையால், அனைத்து இலத்திரனியல் ஊடகங்களும் (தொலைக்காட்சி, செய்மதித் தொலைக்காட்சி, வானொலி, இணைய செய்தித்தாள்கள், வேறு இணையத்தளங்கள், முகநூல் (Facebook), YouTube, கையடக்கத் தொலைபேசி குறும் தகவல் சேவை மற்றும் வேறு சமூக ஊடக வலைத்தளங்களினால் உத்தியோகபூர்வமற்ற முடிவுகள் ஒ(ளி)(லி)பரப்பு செய்யப்படுவதை முற்றாக தவிரத்துக்கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகின்றது.

### 03. முடிவுகளை ஒ(ளி)(லி)பரப்பு செய்யும் உரிமைக்காக பதிவுசெய்துகொள்ளாத இலத்திரனியல் ஊடகங்கள்

தேர்தல் முடிவுகளின் ஒ(ளி)(லி)பரப்பு உரிமைக்காக தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்படி பதிவுசெய்துகொள்ளாத அனைத்து இலத்திரனியல் ஊடக நிறுவனங்களும் முடிவுகளை உடனுக்குடன் பிரச்சாரம் செய்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

**முக்கிய குறிப்பு:**

இருப்பினும், அவ்வாறான ஊடக நிறுவனங்களுக்கு சலுகையொன்றாக தேர்தலின் போது 339 உள்ளூர் அதிகார சபைகளின் அந்தந்த அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை, உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கையுடன்கூடிய உள்ளூர் அதிகார சபைகளின் இறுதி முடிவுகள் முதலியவற்றை ஒ(ளி)(லி)பரப்பு செய்வதற்கு அவர்களுக்கு தடையேதும் இல்லை என்பதோடு, மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் செய்தியறிக்கையொன்றாக முடிவுகளை ஒரு பொழிப்பாக்கி வெளியிடுவதற்கு மக்களின் தேவையொன்றாகக் கருதி வாய்ப்பளிக்கலாம்.

## 04. அனைத்து இலத்திரனியல் ஊடக நிறுவனங்கள் (பத்திரிகைகள்)

அச்சிட்ட பத்திரிகைகளுக்கு முடிவுகளை வழங்குவதற்கு கட்டணமொன்று அறவிடப்பட மாட்டாது என்பதுடன், அரசாங்க தகவல் திணைக்களம் அதற்கு அவசியமான வசதிகளை வழங்கும். அதற்கு அவசியமான அறிவுறுத்தல்களையும் அத்தாட்சிப்படுத்திய முடிவுகளின் ஆவணங்களின் வருடிய பிரதிகளையும் (Scanned Copy) அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு வழங்க தேர்தல் ஆணைக்குழு அவசியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இருப்பினும், பத்திரிகைகளில் இணையத்தளங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற முடிவுகளின் ஒ(ளி)(லி)பரப்பு உரிமையை உரிய முறையில் பெற்றுக் கொண்டிராத பட்சத்தில், இந்த இணையத்தளங்கள் மேலே பந்தி 03 இலுள்ள அறிவுறுத்தல்களின்படி செயலாற்ற வேண்டும்.

## 05. வெளிநாட்டு ஊடக நிறுவனங்கள்

வெளிநாட்டு ஊடக நிறுவனங்களின் இலங்கைப் பிரதிநிதிகளுக்கும் சான்றுறுதிப்படுத்திய முடிவுகளை வழங்குவதற்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்தி அறிவித்து அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**06.** உள்ளூர் அதிகார சபை தேர்தல்களின் முடிவுகளை ஊடகங்களுக்கு வழங்கும் பணி தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு அலுவலர்களின் நிருவாகத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு அவசியமான தொழில்நுட்ப ஆலோசனைகளும் ஒத்தாசைகளும் சைபர் பாதுகாப்புக்கான தேசிய நிலையம் (SLCERT), கொழும்புப் பல்கலைக்கழக கணினியியல் பாடசாலை (UCSC), தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் (NSBM) ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் தகவல் தொழில்நுட்பவியலாளர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

<u>மிக முக்கியமானது</u>

07. இந்த ஊடக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ஒ(ளி)(லி)பரப்பு உரிமைக்காக பதிவுசெய்து கொள்ளும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களுக்காக இருப்பினும் முடிவுகளை கணினி வலையமைப்புகளின் ஊடாக வழங்குவதற்கான இறுதி முடிவு தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

08. ஒவ்வோர் உத்தியோகபூர்வ தேர்தல் முடிவையும் உரிய முறையிலும் சரியாகவும் துரிதமாகவும் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக முன்பு கூறிய விடயங்களுக்கு அமைய அனைத்து ஊடக நிறுவனங்களும் செயலாற்றுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்